**முதன்மை மாவட்ட நீதிமன்றம், தூத்துக்குடி**

நாள்.21.08.2026

Case No.OS.237/2024

PW.1

**திரு.முத்துக்குமார்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை :**

நான் தற்போது என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாயம் மற்றும் ரியல் எஸ்டேட் செய்து வருகிறேன். என்னுடைய மாத வருமானம் எவ்வளவு என்றால் சுமாராக ரூ.60000/– இருக்கும். நான் பிரதிவாதிக்கு எங்கு வைத்து எப்போது பணம் கொடுத்தேன் என்று பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எனக்கும் பிரதிவாதிக்கும் எப்படி எவ்வளவு நாளாக பழக்கம் என்று பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் கொடுத்த பிராமிசரி நோட் யார் முன்னிலையில் சாட்சிகள் யார் என்றும் ஏற்படுத்தப்பட்டது என்று பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. என்னுடைய மாத வருமானம் ரூ60000/–ஐ வைத்து ரூ.48 லட்சம் பணம் கொடுப்பதற்கான வருமான ஆதாரம் இல்லை என்றால் நகையை வைத்தும் ரியல் எஸ்டேட் வருமானத்தை வைத்தும் கொடுத்தேன். நகையை வைத்தும் ரியல் எஸ்டேட் வருமானத்தை வைத்தும் பணம் கொடுத்த சங்கதியை முதல் முறையாக நீதிமன்றத்தில் தற்போது தான் சொல்கிறேன், அந்த விபரத்தை என் பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வேறு எதுவும் தொழிலை செய்கிறேனா என்றால் தற்போது செய்யவில்லை, 2008 வரை MRF Tyre Company ல் வேலை செய்து விருப்ப ஓய்வு பெற்று வந்து விட்டேன். எனக்கு குமாரபுரத்தை சேர்ந்த முத்தையா மகன் சங்கரை தெரியுமா என்றால் தெரியும். நானும் முத்தையாவும் சேர்ந்து தொழில் செய்து வருகிறோமா என்றால் இல்லை. பிரதிவாதி மணி ஐயர் என்ற ஹோட்டல் நடத்தி வருகிறார் என்று பொய்யான தகவலை சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு எத்தனை குழந்தைகள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிக்கு தற்போது எத்தனை வயது என்றால் தெரியாது. பிரதிவாதியின் வயதோ, அவரின் குழந்தைகளின்

S SUBA DEVI

Digitally signed by S SUBA DEVI
Date: 2026.08.21 18:47:48 +0530

படிப்பு விபரங்களோ தெரியாத நிலையில் நான் அவருடைய குழந்தைகளின் படிப்பு செலவுக்காக பணம் கொடுத்ததாக சொல்வது ஏற்றுக் கொள்ளக்கூடிய சங்கதி அல்ல என்றால் சரியல்ல. தாவாவில் உண்மையான விபரங்கள் எதுவும் இல்லாமல் பணம் கொடுத்ததாக மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு 48 லட்சம் கொடுப்பதற்கான வருமான ஆதாரம் இல்லாமல் பிரதிவாதி மீது பொய்யான தகவலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

S SUBA DEVI

Digitally signed by S SUBA DEVI
Date: 2026.08.21 18:47:53 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.